R 5418 (page 79)

# பரிசுத்த ஸ்தலத்திலுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்

## THE SPIRIT BEGOTTEN IN THE HOLY

பொதுவாக மிக நேர்த்தியான பணிவிடைக்காரர்களாக நம்முடைய காதுகளும் நாவும் இருந்து, நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகின்றன. இருந்தபோதிலும், சிலசமயம் அவை தவறாக வழிநடத்தப்படாதபடிக்கு நிர்வகிப்பது கடினமாயிருக்கிறது. எல்லா இடங்களிலும் உள்ள பிரச்சனைகளில் சரிபாதியளவு, தவறாக புரிந்துகொள்ளப்பட்டதன் விளைவாகவே இருப்பதாக வெளிப்படையாகத் தோற்றமளிக்கிறது. தேவன் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளார், வேதம் மற்றும் பிரசங்கம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், வேதாகம விளக்கவுரைகள், ஆசரிப்புக்கூடார நிழல்கள் மற்றும் காவற்கோபுரம் இவைகளும் தவறாக புரிந்துகொள்ளப்படுவதில் ஆச்சரியம் இருக்கமுடியாது. பொருட்கூறுகளை புதிதாக்கி மீட்டெடுக்கவே இவைகளை நாம் செய்யமுடியும் என்பதில் நம்முடைய நாவோ அல்லது பேனாவோ நமக்கு சிறப்பான முறையில் சேவை செய்யும் என்றும், நம்முடைய வாசகர்களின் கண்களும் காதுகளும் அவர்களுக்கு சிறப்பாக சேவை செய்யும் என்றும் நாம் நம்புகிறோம்.

### ஜெநிப்பித்தலே மறுரூபமாக்கும் வல்லமை

ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் விஷயத்தில், பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதல், மனித சுபாவத்திலிருந்து புதிய சுபாவத்திற்கு அவர்கள் கடந்துசெல்வதற்கான மறுரூபமாக்கும் வல்லமையாக இருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் காண்பிப்பதற்கு பெருமுயற்சி செய்கிறோம். இந்த மாற்றம் ஆசரிப்புக்கூடார நிழலில், ஆசாரியர் பிரகாரத்திலிருந்து பரிசுத்தஸ்தலத்துக்கு கடந்துபோவதன்மூலம் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலத்தில், பிரகாரமானது தேவனை அணுகுகிறவர்களின் பூமிக்குரிய நிலைமையை குறிக்கிறது. ஆனால் அவர்களுடைய ஜீவியங்கள் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்குமென ஒரு முழு அர்ப்பணிப்பை இன்னும் ஏற்படுத்தவில்லை.

எப்போது அர்ப்பணிப்பின் படி எடுக்கப்படுகிறதோ அப்போது இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக செயல்பட்டு, நம்முடைய மாம்சத்தின் குறைபாடுகளை மூடுவதற்காக தம்முடைய புண்ணியத்தை அருளி, உடனடியாக நம்மை பிதாவின்முன்பாக நிறுத்துகிறார். பூமிக்குரிய சுபாவத்தின் நம்முடைய அர்ப்பணிப்பு இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தெய்வீக மதிப்பீட்டின்படி நாம் அந்த தருணத்திலிருந்து மாம்சத்துக்கு மரித்து, ஆவியில் பிழைத்திருக்கிறோம் – அதாவது, அழிவுக்குரிய வித்தினால் அல்ல, மாறாக தேவனுடைய ஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறோம்.

இவ்வாறு ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும் தேவனுடனான தங்களின் உறவில் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறார்கள் – அதாவது, தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள். அதன்பிறகு அவர்கள் 7 விளக்குத்தண்டுகளுடன் நிற்கிற பொன் குத்துவிளக்கினால் குறியிட்டுக் காட்டப்படுகிற சத்தியத்தினால் ஒளியூட்டப்படுதலைப் பெற்றிருக்கிறார்கள்; சமூகத்தப்ப மேஜை ஆவிக்குரிய ஆகாரமாக குறித்துக் காட்டப்படுகிறது. நறுமண தூபபீடமானது, தொழுதுகொள்ளுதல் மற்றும் ஜெபிப்பதற்கான சிலாக்கியங்களாக குறித்துக் காட்டப்படுகிறது.

இந்த யுகமுடிவுவரை, இந்நிலைமை தொடர்ந்து நடைபெற்று, ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரும், மிகவும் உண்மையுள்ளவர்களாகிய சிறுமந்தை வகுப்பாருக்கும் சற்று குறைவான உண்மைத்தன்மையை காட்டும் திரள்கூட்டத்து வகுப்பாருக்குமிடையே நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை அல்லது தனித்தன்மை ஏற்படுத்தப்படும். இதற்குப்பிறகு, திரள்கூட்டத்து வகுப்பார் நிழலான லேவி கோத்திரத்தாருக்கு நிஜமாக இருப்பர்.

மேசியாவின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டபிறகு, புதிய ஒழுங்குமுறையின்கீழ், கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்களாகிய தகுதியடைந்த சபைக்கும், நிஜமான லேவியர்களாகிய திரள்கூட்டத்தாருக்குமான தனித்தன்மை நிரந்தரமாக இருக்கும். இந்த இரு வகுப்பாரின் ஊழியங்களும் வேறுபட்டிருக்கும். முந்தைய வகுப்பார் சிங்கசனத்தின்மீது அமர்ந்துள்ள ஆசாரியராகிய மெல்கிசேதேக்குடன் பொருந்துகிற ஆசாரியத்துவமாயிருப்பர். பிந்தைய வகுப்பாரின் பணி, லேவியர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகளோடு பொருந்துகிறதாயிருக்கும். அவை, ஆசாரியர்களின் பணிவிடைக்காரர்களாக இருந்து, ஜனங்களுக்கு போதித்தல் போன்றவைகளை குறிக்கிறது. அவர்கள் தங்களுக்கான வழிகாட்டுதல்களை ஆசாரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள்.